



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க அவசரசெயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்புரை ஆற்றினார். அருகில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.எல் ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ ,மாவட்ட துணை செயலாளர்கள் துரைமஸ்தான், குமுதா குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், கே.சுந்தரம், அசோகன் கலைமணி மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### விடுதலைப் போராட்ட வீரர்

# வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவிப்பு!

சென்னை, மே 9-

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு, அவரது பெருமைகளைப் போற்றி அமைச்சர் பெருமக்கள் இன்று (9.5.2025) காலை 9.30 மணியளவில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மன், ஜெகவீர கட்டபொம்மு மற்றும் ஆறுமுகத்தம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். இவர் முப்பது வயது வரை தந்தை ஜெகவீர கட்டபொம்மு பாளையக்காரராக இருந்து வந்ததால் தந்தைக்கு உதவியாக இருந்தார். அவருக்குப்பின் கட்டபொம்மன் 1790ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி, 47வது பாளையக்காரராகப் பொறுப் பேற்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மனிடம் வரி கேட்டு வந்த வெள்ளையர்களை எதிர்த்து வரி கொடுக்க மறுத்தார். அதனால் ஏற்பட்ட பகைக்காரணமாக வெள்ளையருடன் போரிட்டு இறுதியில் ஆங்கிலேயத் தளபதி பானர்மென் உத்தரவின்படி, அக்டோபர் 16ஆம் தேதி, 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப் பட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகத்தைப் போற்றி, அழிக்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டையை பாஞ்சாலங்குறிச்சியில் மீண்டும் கட்டி எழுப்பி 18.8.1974 அன்று திறந்துவைத்தார். அத்துடன் கட்டபொம்மனின் 204 வழித்தோன்றல்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து நிலப்பட்டா, மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 14.4.2023 அன்று கட்டபொம்மன் திருவுருவச் சிலையை அமைத்து, “வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உரத்த குரல் எழுப்பிய போர் மறவன் வீரபாண்டிய கட்டபொம்மன்” எனக் கல்வெட்டில் பொறித்துப் பாராட்டியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியிலும், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலும் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைகளுக்கு, அவரது வீர உணர்வுகளைப் போற்றி ஆண்டுதோறும் சிறப்புகள் செய்யப்படுகின்றன.

அதன்படி, இந்த ஆண்டின் சித்திரைத் திங்கள் கடைசி வெள்ளிக்கிழமையான இன்று (9.5.2025) காலை வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைகளுக்கு அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்திச் சிறப்பிக்கிறார்கள்.

## ‘வெற்றி வேந்தர் தளபதி வெல்கவே’



நான்காம் ஆண்டினை நல்லபடி
நாடே போற்றிட கோலோச்சி
ஐந்தாம் ஆண்டினைத் தொடங்குகிற
ஆற்றல்மிகு தளபதிக்கு வாழ்த்துரைப்போம்...!

தாழ்ந்து கிடந்திட்ட தமிழ்நாட்டை – தன்
தளரா உழைப்பால் தலைநிமிர்த்தி
வாழ்ந்திட வைத்திட்ட தளபதியை
வாழ்நாள் முழுதும் வாழ்த்திடுவோம்...!

“எல்லார்க்கும் எல்லாம்” என்றிட்ட
எழுச்சிமிகு கொள்கையை ஏந்தியே
நல்லோர் போற்றிடப் பணியாற்றும்
நாயகன் வாழிய நலமுறவே...!

ஒவ்வொரு கோரிக்கையும் கவனித்து – அதை
உடனுக் குடனே நிறைவேற்றி
செவ்விய வகையில் தீர்வுகாணும்
செம்மாந்த தளபதிக்கு நிகரில்லை...

சொன்னது அனைத்தும் முடித்து...
சொல்லாததற்கும் வடிவம் கொடுத்து...
பன்னோக்குப் பார்வையில் நடைபோடும்
பார்போற்றும் முதல்வராய்த் திகழுகின்றார்...!

வேந்தர்கள் உரிமையை நிலைநாட்டி – வெற்றி
வேந்தராய் இங்கேவலம் வந்திடும் – கல்வி
மாந்தர்கள் போற்றும் மாமணி
மகத்துவம் படைத்திட்ட வைரமணி...!

பேருந்தில் மக்களோடு மக்களாய்
பெருமையுடன் பயணிக்கும் நம்முதல்வரை
பார்க்கவே பெருமையாய் இருக்கிறது – அவர்
பரம்பரை பண்புநலன் தெரிகிறது...

வருகிற ஓராண்டு காலமும்
வரலாறு போற்றிட அரசாண்டு
“இருநூறு” வெற்றியைப் பெற்றிடவே – தளபதியை
இதயத்தால் இனிதே வாழ்த்திடுவோம்!



கவிஞர்
இரவிபாரதி

### ஒன்றிய செயலாளர் பழனி தலைமை!

# மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – செங்கல்பட்டு சீனிவாசன் சிறப்புரை!

திண்டிவனம். மே 9.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மரக்காணம்மேற்குஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு “சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மானூர் ஊராட்சியில் இன்று (9.5.2025) மாலை 5.00 மணி அளவில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மரக்காணம் ஒன்றிய துணைப்பெருந்தலைவரும் மரக்காணம்மேற்குஒன்றிய செயலாளர்பழனிதலைமை தாங்குகிறார்.ஒன்றியஅவை தலைவர் குமார், மாவட்ட பிரதிநிதி ராமமூர்த்தி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம்மத்தியஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், மரக்காணம் பேரூராட்சி மன்றதலைவர்வேதநாயகி, ஒன்றிய நிர்வாகிகள் ரவிக்குமார், மீனாகுமாரி, முருகன், ஆதிகேசவன், தேவதாஸ், மானூர் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ், மானூர் ஒன்றிய கவுன்சிலர் மகாலட்சுமி காளிதாஸ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் செந்தில்குமார், மாவட்ட கலைஇலக்கியஅணிதுணை அமைப்பாளர் சிவகுமார், கிளை செயலாளர்கள் பச்சையப்பன்,வாசுதேவன், அஜய் சேகர், ராபர்ட், செல்வகுமார் ராஜன், சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் செங்கல்பட்டு சீனிவாசன், விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளரும், செஞ்சிதொகுதிசட்டமன்ற உறுப்பினர்செஞ்சிமஸ்தான் ஆகியோர்கலந்துகொண்டு திராவிடமாடல்ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றுகின்றனர். கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீத்தாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், திண்டி வனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், கதிரேசன், மாவட்ட ஆதிதிராவிட நல அணி அமைப்பாளர் திருமலை, முன்னாள் ஒன்றிய செயலாளர் காளிதாசன், மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், புஷ்பவள்ளி குப்புராஜ் ,மரக்காணம் பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் பலராமன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டுசிறப்பிக்கின்றனர். மானூர் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கலைமணி நன்றி கூறுகிறார்.

### மும்பை புறநகர் மாநிலக் கழக

# பொறுப்பாளர் - பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மும்பை புறநகர் மாநிலக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மும்பை புறநகர் மாநிலக் கழகப் பொறுப்பாளர் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

பொறுப்பாளர் :
**அலிசேக்மீரான்,**
பி-17, 18, 19-எஸ்.கே. இன்டஸ்ரியல் எஸ்டேட்,
ஓஷிவாரா, ஜோகேஷ்வரி (மேற்கு)
மும்பை - 400 102.

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:
1. பி.கிருஷ்ணன், செம்பூர்கிளை
2. வதிலைபிரதாபன், கல்யான்கிளை
3. ஜேம்ஸ்தேவதாசன், பாண்டுப்கிளை
4. இளங்கோஅப்பாதுரை, குர்லாகிளை
5. வே.சதானந்தன், கல்யான்கிளை
6. வெ.அ.ஜெய்னுல்ஆப்தின், பிவண்டிகிளை
7. வீரை.சோ.பாபு, டொம்பிவிலிகிளை
8. சிவகுமார்சுந்தர்ராஜ், ஆரேகாலனிகிளை
9. மெஹபூப்பாட்சா, பிவண்டிகிளை
10. சோ.பா. குமரேசன், கோரேகான்கிளை.
11. ச.சிலுவைதாசன், பாண்டுப்கிளை.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 08.05.2025

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



இராமநாதபுரம் மாவட்டம் செவ்வூர் கிராமத்தில் அமைக்கப்பட உள்ள சாலை மற்றும் மேம்பாலம் பணி குறித்து மனுக்கள் குழு தலைவர் மற்றும் அரசு தலைமை கொறடா கா .ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஜோதி, சின்னப்பா,தமிழ் நாடு சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் , மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சின்ன சேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை

# ரயில்வே பணிகளை விரைந்து முடித்திட வேண்டும்!

## சேலம் கோட்ட ரயில்வே துறை – எம்.பி.க்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளக்குறிச்சி தே.மலையரசன் எம்.பி. வேண்டுகோள்!



சேலம், மே.9-

தென்னக ரயில்வே சேலம் கோட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வருடாந்திர ஆலோசனை கூட்டம் சேலம் டி.ஆர். எம். அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தென்னக ரயில்வே பொது மேலாளர் ஆர்.என். சிங் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கள்ளக் குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் தொகுதி பொதுமக்களுக்கு தேவையான சின்னசேலம் முதல் கள்ளக்குறிச்சி வரை சுமார் 17.4 Km ரயில்வே பணிகள் தொடங்கப்பட்டன.

ஆனால் இதில் சின்னசேலம் முதல் பொற்படாக்குறிச்சி வரை சுமார் 12.1Km வரை மட்டுமே பணிகள் முடிவு பெற்றுள்ளன மீதமுள்ள 5.3 Km அதாவது பொற்படாக்குறிச்சி முதல் கள்ளக்குறிச்சி வரை பணியை விரைந்து முடிக்குமாறும் மற்றும் இந்த ரயில் பாதையை அரகண்டநல்லூர் வரை நீட்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள அசகளத்தூர் கிராமத்தில் முந்தைய மீட்டர்கேஜ் பாதையில் செயல்பட்ட ரயில் நிலையம் அகல ரயில் பாதை மாற்றத்திற்குப் பிறகு இந்த ரயில் நிலையம் இயங்கவில்லை. இந்த ரயில் நிலையம் வழியாக புக்கிரவாரி கூத்தாக்குடி முகாசப்பாரூர் விருதாச் சலம் வழியாக இந்த ரயில் நிலையம் இயங்குவதன் மூலம் பக்கத்தில் உள்ள சுமார் 35 கிராமங்களில் உள்ள 75,000/ ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன் பெறும் வகையில் மீண்டும் இந்த ரயில் நிலையம் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

மேலும் அயோத்தி பட்டினம் Lc no.169 கேட் பகுதியில் ரயில்வே மேம்பாலம் அமைத்து தர வேண்டும்.

இந்த ரயில்வே மேம்பாலம் அமைப்பதன் மூலம் திருப்பதி திருப்பத்தூர் வாணியம்பாடி காஞ்சிபுரம் ஆகிய பகுதிகளுக்கு செல்லும் சுமார் ஒரு லட்சம் வாகனங்கள் தங்கு தடை இன்றி சென்று வர பயனுள்ளதாக இருக்கும்.

அதேபோல் பெருமா பாளையம் ஊர் பகுதியில் சுரங்கப்பாதை அமைத்து தருமாறும் கோரிக்கை விடுத்தார்.

விருத்தாச்சலம் நிறுத்தத்தில் வந்தே பாரத் ரயில் சேவையை நிறுத்தம் செய்யுமாறும், சின்னசேலம் ரயில்வே நிலையத்தில் அமிர்த பாரத் திட்டத்தில் நடைபெறும் பணிகள் தரமாகவும் விரைந்து முடிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் சேலம் விருத்தாச்சலம் சென்னை பகல் நேர ரயில் சேவை தொடங்குவதன் மூலம் அதாவது சென்னைக்கு ரயில் காலை 10 மணிக்கு சென்றடையவும் சென்னையில் இருந்து மாலை 6 மணிக்கு புறப்படுமாறும் வழிவகை செய்வதன் மூலம் பொதுமக்கள் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், வணிகர்கள் என அனைவரும் பயன்பெறுவர்.

ஆத்தூர் ராசிபுரம் ரயில்வே மேம்பாலம் பணிகள் விரைந்து முடிக்குமாறும் மேலும் முகசப்பாரூர் முதல் விருத்தாச்சலம் வரை Bypass Line அமைப்பதன் மூலம் ரயில்வே துறைக்கு பெரும் அளவில் பயனளிக்கும் என்றும் மேலும் Lc No.118 மற்றும் Lc No.128 ஆகிய பகுதிகளில் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நிறுத்தி அதை மேம்பாலமாக அமைத்துத் தருமாறும் ரயில்வே துறையில் உள்ள பொது மேலாளர் மற்றும் ரயில்வே துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.முத்துராஜா மற்றும் சாந்தி ஆகியோர்களின் மகன், கடந்த 15 நாட்களுக்கு முன்பு கண்ணாடி விரியன் பாம்பு கடித்து கிருஷ்ணகிரி டிசிஆர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதை அறிந்து, அவரது குடும்பத்தாரிடம் ரூ.25,000 நிதி உதவி கருணை உள்ளத்துடன் வழங்கினார்.

**நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகரத்தில்**
**நான்காண்டு சாதனை விளக்கப்பொதுக்கூட்டம் !**
**மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை !**



| நாள் | ஒன்றியம்/நகரம் | பேச்சாளர் | இளம் பேச்சாளர் |
|---|---|---|---|
| 09/05/2025 | கீழ்வேளூர் வடக்கு | சோம.செந்தமிழ்செல்வன் | - |
| | திருமருகல் தெற்கு | ஆரூர் ஜோதி | - |
| | வேதை மேற்கு | மு.கருணாகரன் | - |
| 10/05/2025 | கீழ்வேளூர் தெற்கு | தெ.தியாகராஜன் | - |
| | நாகை வடக்கு | மு. கருணாகரன் | - |
| | தலைஞாயிறு | கவிஞர் பெர்னாட்ஷா | - |
| 11/05/2025 | கீழையூர் கிழக்கு | வை. பரிதிச்செல்வன் | இரா. பிரித்தி |
| | வேதை நகரம் | கவிஞர் பெர்னாட்ஷா | பா. அருண்குமார் |
| 12/05/2025 | நாகை தெற்கு | வை.பரிதிச்செல்வன் | - |
| | திருமருகல் வடக்கு | மு. கருணாகரன் | - |
| | வேதை கிழக்கு | ஆரூர் ஜோதி | - |
| 13/05/2025 | கீழையூர் மேற்கு | ஆரூர். ஜோதி | - |
| | நாகூர் நகரம் | கு. வாஞ்சிநாதன் | சே. கார்த்தி |
| | நாகை நகரம் | ஆரூர். ஜோதி | ர.அகிலா |

என்.கௌதமன்
செயலாளர்,
நாகை மாவட்ட தி.மு.க